**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண். 113/2024

பெயர்:– நித்யா நாள்:04.11.2025

பி.வா.சா. 2ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– (வாதிகள் தரப்பில்)

நான் அறநிலையத்துறையில் மொடக்குறிச்சி சரக ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். ஆவணங்கள் அடிப்படையில் எனக்கு இந்த வழக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பாக பிரிவினை பத்திரத்தின் ஆவண எண்.2065/1916 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.99 A இனாம் மதிப்பு என்றும், விஸ்தீரணம் ஏக்கர்4.53 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1893/1950 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்று நான் ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்று நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால் ஒப்புக்கொள்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4ல் அசல் வழக்கு எண்.307/1971ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ஒப்புக்கொள்கிறேனா என்றால் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி வழக்கின் தீர்ப்பாணை என்று எனக்கு தெரிகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணம் அசல் வழக்கு எண்.20/1997ல் ஏற்பட்ட மேல் முறையீட்டு எண்.563/2003 CMP No.8497/2003 மற்றும் 353/2013 மேற்படி தீர்ப்பு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் மேற்படி வழக்கில் நாங்கள் தரப்பினர் இல்லை. மேற்படி தீர்ப்பை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. இனாம் நிலம் என்றால் என்ன கோவிலுக்கு வழங்கப்பட்ட நிலம். தற்போதும் இனாம் நிலமாக உள்ளதா என்றால் கோவில் பெயரில்

உள்ளது. இனாம் ஒழிப்பு சட்டத்தில் பிரிவு 8 பொய்யான சங்கதிகள் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சட்டப்பிரிவு 8 ஐ பொறுத்து நான் தவறாக எதுவும் கூறவில்லை. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து வாதிகள் உடையது என்று கூறி தாக்கல் செய்துள்ளார்கள். இனாம் ஒழிப்பில் பட்டா என்பது வேறு உரிமை மூலம் என்பது வேறு என்பது எனக்குதெரியுமா என்றால் தெரியும். இனாம்தாரருக்கு எந்த ஆவணங்கள் இருந்தாலும் அந்த நிலத்தை அனுபவிக்கின்றவர் தனது உரிமை மூலத்தை நிலை நாட்ட முடியும் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.99A நஞ்சைகிளாம்பாடி சொக்க நாச்சி அம்மன் கோவில் என்றுள்ளது என்றால் சரிதான். அதன் கீழ் பூசாரிகள் கூ.பெரியகாளியாண்டி இன்னும் 18 பேர்கள் என்றுள்ளது என்றால் சரிதான். மேற்படி பூசாரிகள் கோவில் தர்மகர்த்தாவாக இருந்தார்கள் என்றால் ஆவணத்தில் பூசாரிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பத்தி 2ல் வி.எஸ். மாணிக்க சுந்தரம் என்பவர் இந்த பூமி தன்னிடம் உள்ளது என்றும், தனக்கு பட்டா வேண்டும் என்றும் சாட்சியம் அளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அந்த கிராமத்தின் கர்ணம் நீதிமன்ற சாட்சி ஒன்றாக விசாரிக்கப்பட்டு இந்த நிலங்கள் வி.எஸ்.மாணிக்க சுந்தரத்தின் சுவாதீனத்தில் உள்ளதாக சாட்சியம் அளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் தாசில்தார் கோவிலுக்கு பட்டா மட்டுமே வழங்கியுள்ளார் என்றாலும் உரிமை மூலத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் உரிமை மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. தேவதாய இனம் சொக்க நாச்சி அம்மன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உரிமைமூலம் டி.டி.எண்.612 நஞ்சை கிளாம்பாடி சொக்கநாச்சி அம்மன்கோவில் என்று முதல் பக்கத்தில் வரிசை எண்.4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. உரிமை மூலம் பற்றி எங்கள் தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆம். எல்லா ஆவணத்திலும் மேற்படி எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ.4 சொத்து பதிவேட்டில் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடா

என்றால் அல்லது கோவில் அலுவலகத்தில் இருந்ததா என்றால் என்னுடைய அலுவலகத்தில் நகல் இருந்தது. மேற்படி ஆவணத்தின் அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் இணை ஆணையாளர் அலுவலகம் அல்லது பரம்பரை அறங்காவலர் அலுவலகத்தில் இருக்க வேண்டும். இணை ஆணையர் அங்கீகார உத்தரவில் 12.10.2006ம் தேதிய உத்தரவில் சொத்து பதிவேடு தற்போதைக்கு சரி என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றால் இது நிரந்தரமானது அல்ல , தற்போதைக்கு அங்கீகரித்துள்ளார்கள் என்றால் வேறு யாராவது கோவிலுக்கு இனாம் எழுதி வைத்தால் மாறுபாட்டிற்கு உட்பட்டது என்பதால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் திருக்கோவில் உடைய சேர்த்தல், நீக்கல் பதிவேடுகள் தயார் செய்து அறநிலைய சட்டப்பிரிவு 30ன் கீழ்இணை ஆணையரிடம் அங்கீகாரம் பெற வேண்டும் என்றால் சரிதான். அதன்படி இன்றைய தேதி வரை வாதி கோவிலுக்கு அறநிலையசட்டப்பிரிவு 30ன் கீழ் பதிவேடு தயார் செய்யப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அறநிலைய சட்டப்பிரிவு 31ன் கீழ் பத்தாண்டிற்கு ஒருமுறை சொத்து பதிவேடு மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இணை ஆணையரிடம் அங்கீகாரம் பெறவேண்டும் என்றால் சரிதான். பிரிவு 31ன் கீழ் பதிவேடு புதுப்பிக்கப்பட்டு உள்ளதா என்றால் இல்லை. பரம்பரை அறங்காவலர் மீது அவ்வாறு தயாரிக்காததால் அறநிலையத்துறை நடவடிக்கை எடுத்துள்ளதா என்றால் இல்லை. சட்டப்பிரிவு 31ன் கீழ் புதிய சொத்து பதிவேடு அங்கீகாரம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. பரம்பரை அறங்காவலர் என எப்போது முதன் முதலில் அங்கீகாரம் கொடுக்கப்பட்டது என்றால் அப்போதைய அறநிலையத்துறை துணை ஆணையர் O.A.No.18/69 (Old O.A.No.13/1967) உத்தரவு நாள். 21.12.1970 திரு. பெரியாண்டி, சொக்காண்டி, பிச்சை முத்து ஆகிய மூவரும் பரம்பரை அறங்காவலர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு 1967ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் மேற்படி வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் இருந்து தற்போது வரை வாதிகள் சுவாதீனத்தில் உள்ளது என்றால் ஆக்கிரமிப்பாளராக வாதிகள் உள்ளார்கள். 1967ல் இருந்து சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் எப்போதிருந்து

## Copy of Deposition

சுவாதீனத்தில் உள்ளார்கள் என்று தெரியாது. வாதிகளின் சுவாதீனத்தை அகற்றுவதற்கு தற்போது வரை அறநிலையத்துறையாலோ அறங்காவலர்களாலோ சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஈரோடு இணை ஆணையர் நீதிமன்றத்தில் MP No.41/2024 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர்தான் அறநிலையத்துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு முன்பு அறிவிப்பு அனுப்பியிருக்கலாம். 01.03.2022ம் தேதி அன்று தான் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு முன்பும் அறிவிப்பு அனுப்பியிருக்கலாம். அதன் நகலை தாக்கல் செய்யமுடியுமா என்றால் நகல் அலுவலகத்தில் இருந்தால் தாக்கல் செய்யலாம். 1916ம் ஆண்டு பாகபிரிவினை முதல் இன்றைய தேதி வரை தாவா சொத்து வாதிகள் சுவாதீனத்தில் உள்ளது என்றாலும், செட்டில்மெண்ட் தாசில்தார் வழங்கிய உத்தரவு பட்டாவை பொறுத்ததுதான் உரிமை மூலத்தை பொறுத்தது அல்ல என்றாலும், நீண்ட அனுபவத்தினால் தாவாசொத்து, சொத்தின் உரிமை மூலம் வாதிகளுக்கு உரியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–இல்லை**

| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
|---|
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.11.04 14:26:16 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |